**பீஓசி டிரவல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் - 2023**

---------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பீஓசி டிரவல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் (''கம்பனி'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கை தகவல்களை உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்தக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை நான் பெற்றிருந்தேன்.

கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கம்பனியின் கடன் கொள்கையின் பிரகாரம் அரசாங்க திணைக்களங்கள், பெருநிறுவன (Corporate) வாடிக்கையாளர்கள் மற்றும் தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு அதிகபட்ச கடன் காலமாக முறையே 60 நாட்கள், 30 நாட்கள் மற்றும் 15 நாட்கள் அனுமதிக்கப்படுவதுடன் அதிகபட்ச கடன் நீடிப்பு 10 நாட்களுக்கு மாத்திரமே வழங்கப்படுகிறது. ஒவ்வொரு வாடிக்கையாளர் வகையிலுள்ள நிலுவை கடன்பட்டோர் மீதியினை பகுப்பாய்வு செய்யும் போது அனுமதிக்கப்பட்ட கம்பனியின் கடன் காலத்தினை விட சில நிலுவைகள் விஞ்சியிருப்பது அவதானிக்கப்பட்டது. எனவே நிர்ணயிக்கப்பட்ட கடன் காலப்பகுதிக்குள் நிலுவைக் கடன்பட்டோர் மீதியினை கம்பனியினால் அறவிடமுடியவில்லை என அவதானிக்கப்பட்டது. மொத்த நிலுவைக் கடன்பட்டோர் மீதியின் வயதுப் பகுப்பாய்வு பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது. | பிரயாண மற்றும் சுற்றுலா துறையானது தவிர்க்கமுடியாத ஒரு கடன் சார்ந்த சந்தையாக உள்ளது. கம்பனியின் கடன் கொள்கையினை பின்பற்றுமாறு அரச நிறுவனங்கள் மற்றும பெருநிறுவன நிறுவனங்கள் என்பவற்றின் மீது தேவையற்ற அழுத்தங்களை பிரயோகிக்கும் போது அவர்களுக்கு பல்வேறுபட்ட பிரயாண மற்றும் சுற்றுலா கம்பனிகளினை தொடர்வதற்கும் | கம்பனியின் கடன் கொள்கையின் பிரகாரம் கடன் காலப்பகுதிக்குள் பெற வேண்டிய மீதிகளை மீளப்பெறுவதற்காக சகல முயற்சிகளையும் எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. மேலும் கம்பனியின் தொழிற்படு மூலதனத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நீண்ட கால நிலுவைகளை மீளப் பெறுவதற்காக புதிய |

| வாடிக்கையாளர் வகை | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை (ரூபா 000’) | | | | மொத்த நிலுவையின் % ஆக நிலுவை |
|---|---|---|---|---|---|
| | **0-180 நாட்கள்** | **181-360 நாட்கள்** | **360 நாட்களுக்கு மேற்பட்டது** | **மொத்தம்** | |
| அரசாங்கம் | 52,217.1 | 1,250.4 | 8,034.3 | 61,501.8 | 38 |
| பெருநிறுவனங்கள் | 73,706.1 | 7,197.9 | 19,192.4 | 100,096.4 | 62 |
| மொத்தம் | 125,923.2 | 8,448.3 | 27,226.7 | 161,598.2 | 100 |

(ii) ரூபா. 161,598,215 மொத்த நிலுவைக் கடன்பட்டோர் மீதியில், ரூபா. 125,923,253 அல்லது 78 சதவீதமானவை 180 நாட்கள் வரை நிலுவையாக உள்ளதுடன் ரூபா. 27,226,719 அல்லது 17 சதவீதமானவை 360 நாட்களுக்கு மேலாக நிலுவையாக உள்ளது. இது கம்பனியின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளை பாதகமாக பாதிக்கலாம்.

(iii) ரூபா. 161,598,215 மொத்த நிலுவையில், ரூபா. 100,096,424 அல்லது 62 சதவீதமானவை பெருநிறுவன வாடிக்கையாளர்களிடமிருந்து பெறவேண்டியவையாகும். கம்பனியானது பெருநிறுவன வாடிக்கையாளர்களுக்கு 30 நாட்கள் கடன் காலப்பகுதியினை அனுமதித்த போதிலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த பெற வேண்டியவைகளில் ரூபா. 26,390,319 அல்லது 16.3 சதவீதமானவை 181 நாட்களுக்கு மேல் நிலுலையாக உள்ளது.

கையாள்வதற்கும் தெரிவுகள் காணப்படுவதனால் வாடிக்கையார்களை இழப்பதற்கு இது சவாலாக அமையலாம். எமது வழங்குனர்களுக்கு உரிய நேரத்திற்குள் கொடுப்பனவு செலுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக கம்பனிக்குள் சிறிய நித்ப்பாய்ச்சலினை பேணும் நோக்கில் கம்பனியினுள் காணப்படும் கடன் கொள்கையினை கடைப்பிடிக்குமாறு ஊழியர்களுக்கு தொடர்ச்சியாக அறிவுறுத்தப்படுகிறது. இதன் விளைவாக கணக்காளர் நீண்ட கால நிலுவையினை அறிவிடுவது தொடர்பாக கலந்துரையாடுவதற்கு சகல ஊழியர்களுடன் தனிப்பட்ட கடன்பட்டோர் கூட்டம் ஒன்றினை காலக்கிரமத்தில் மேற்கொள்கிறார். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அரச நிறுவனங்கள் மற்றும் தனியார்/ பெருநிறுவன கம்பனிகளுடன் ஒரு நேரத்தில் பெறவேண்டியவைகள் பூச்சியமாக இருப்பதற்கு வரையறுக்கப்பட்ட சாத்தியக்கூறுகளே உள்ளன. ஏனெனில் கொடுப்பனவுகளை செலுத்தி புதிய சீட்டுக்களை வழங்குவதால் இது எப்போதும் ஒரு வியாபார முறையாகும்.

தந்திரோபாயங்களை அறிமுகம் செய்வதற்கும் பரிந்துரைக்கப்படுகிறது.

### 1.5.2 செலுத்தவேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 31 திசெம்பர் 2023 இல் உள்ளவாறு மொத்தமாக செலுத்த வேண்டிய நீண்டகால நிலுவை ரூபா 3,536,221 இருந்ததுடன் மொத்த நிலுவையில் 01 வருட காலப்பகுதிற்கு மேற்பட்ட நிலுவையாக ரூபா 2,425,748 இருந்தது. விபரங்கள் பின்வருமாறு வழங்கப்படுகின்றது.<br><br>**விபரம்** — **தொகை (ரூபா)**<br>வங்கியினால் அடையாளம் காணப்படாத கடன் — 2,872,468<br>பயன்படுத்தப்படாத விமானச் சீட்டு மீளளிப்பு — 35,700<br>ஏடிஎம் (ADM) தொங்கல் — 628,053<br>**மொத்தம்** — **3,536,221** | **வங்கியினால் அடையாளம் காணப்படாத கடன்**<br>கொவிட் 19 இற்கு பின்னர் பல பிரயாணிகள் கம்பனியின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடி மாற்றங்களை பயன்படுத்தி நிதியினை மாற்றுகின்றனர். பிரயாணி அல்லது விற்பனை ஊழியர் கொடுப்பனவு பரிமாற்றத்தை உறுதிப்படுத்தும் உரிய சான்றுடன் உறுதிசெய்யும் வரை எவ்வித பரிமாற்றங்களினையும் தீர்ப்பனவு செய்யக்கூடாது என காசாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பிரயாணி இதனை உறுதிப்படுத்துவதற்கு கால அவகாசம் காணப்படுகிறது. அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்ட போதிலும் நடைமுறை விடயங்கள் காரணமாக இதனை கட்டுப்படுத்த முடியாதுள்ளது. 05 வருடங்களுக்கு பின்னர் சபையின் அங்கீகாரத்துடன் மீதிகளானது கம்பனியின் வருமானக் கணக்கிற்கு மாற்றப்படும்.<br><br>**பயன்படுத்தப்படாத விமானச் சீட்டு மீளளிப்பு**<br>மீளளிக்கப்படும் என்பதன் பிரகாரம் நாங்கள் இத்தொகையினை விமான நிலையம் மூலம் பெற்றதுடன் இன்று வரை பிரயாணியிடமிருந்தோ, ஊழியரிடமிருந்தோ எவ்வித வேண்டுதலும் கிடைக்கவல்லை. 05 வருடங்களுக்கு பின்னர் சபையின் அங்கீகாரத்துடன் மீதிகளானது கம்பனியின் வருமானக் கணக்கிற்கு மாற்றப்படும்.<br><br>**ஏடிஎம் (ADM) தொங்கல்**<br>சில சந்தர்ப்பங்களில் விமான நிலையங்கள் கட்டண விதிகளின் பிரகாரம் அறவிடுவதில்லை. இதனால் அவர்கள் சில விமான சீட்டுகளுக்காக குறைந்த தொகையினை அறவிடுகிறார்கள். இச்சந்தர்ப்பத்தில் அவர்கள் மீண்டும் கொடுப்பனவை மீள அறவிடுவார்கள் என்பதனால் கம்பனி வேறுபடும் தொகையினை குறிப்பிட்ட காலப்பகுதிக்கு பேணும். | நீண்ட கால நிலுவை மீதிகளை அகற்றுவதற்கு தேயையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

பெரும்பாலும் நாங்கள் ஒரு வருட காலப்பகுதிக்குள் ஏடிஎம் (ADM) எதனையும் பெறவில்லையாயின் இத்தொகையானது ஏடி (AT) கொள்வனவு கணக்கிற்கு பொது முகாமையாளர் அல்லது உயர் நிறைவேற்று உத்தியோகத்தரின் (GM/CEO) அனுமதியுடன் மாற்றப்படும்.

(ii) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் செலுத்த வேண்டிய வியாபார மீதி ரூபா 47,331,358 ஆகும். இந்த நீண்டகாலமாக செலுத்த வேண்டிய நிலுவை மீதியினுள் 06 மாதங்களுக்கு மேல் நிலுவையாக உள்ள ரூபா 964,702 உள்ளடங்குகிறது. கம்பனி செலுத்த வேண்டிய வியாபார மீதியின் வயதுப் பகுப்பாய்வு கீழே வழங்கப்பட்டுள்ளது.

| **நாட்களின் எண்ணிக்கை** | **தொகை (ரூபா)** |
|---|---|
| 0-90 | 46,207,035 |
| 91-180 | 159,621 |
| 181-270 | 54,416 |
| 271-360 | 118,623 |
| > 360 | 791,663 |
| **மொத்தம்** | **47,331,358** |

நாங்கள் கொடுப்பனவை செலுத்துவதற்காக பட்டியலை அனுப்புமாறு கூறிய போதிலும் இது வரை செலுத்த வேண்டிய சில வியாபார மீதிகளை செலுத்துமாறு எங்களுக்கு கோரிக்கையிடப்பில்லை. நடைமுறையில் இது போன்ற சந்தர்ப்பங்களின் போது இச்செலுத்த வேண்டிய வியாபார மீதிகளை 05 வருடங்களுக்கு பேணுவதுடன் குறிப்பிட்ட உறுதிப்படுத்தலின் பிற்பாடு சபை அங்கீகாரத்துடன் வருமானக் கணக்கிற்கு இவைகள் மாற்றப்படும்.

நீண்ட காலமாக நிலுவையிலுள்ள மீதிகளை தாமதமின்றி அகற்றுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

### 1.5.3 ஒழுங்கமைப்பின் தொடர்ந்து செல்லல்

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (i) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச்சட்டத்தின் 17 (1) (அ) – (எ) ஆம் பிரிவின் கீழ் துணைக்கம்பனியின் முக்கிய வியாபார நடவடிக்கைகள் வராமை காரணமாக இலங்கை மத்திய வங்கியானது 2017 நவம்பர் 20 ஆம் திகதிய அவர்களின் கடிதத்தின் ஊடாக அடுத்து 03 வருடங்களுக்குள் பீஓசி டிரவல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டில் உள்ள பீஓசி தொகுதியின் உரிமையினை அகற்றுவதற்கு இலங்கை வங்கிக்கு அறிவுறுத்தியுள்ளது. 2017 திசெம்பர் 28 இல் துணைக்கம்பனியினை அகற்றுவதற்கான தீர்மானம் இலங்கை வங்கியின் இயக்குனர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. 2023 யூலை 24 இல் முதலீட்டினை திரும்பப்பெறுவது தொடர்பான | பீஓசி டிரவல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் முதலீட்டு திரும்பப் பெறுதலானது இலங்கை வங்கியினால் கையாளப்படுகின்றது. | முதலீட்டு திரும்பப் பெறுதல் செயன்முறையினை விரைவுபடுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

தீர்மானமொன்று கம்பனியினால் நிறைவேற்றப்பட்டது. வருங்கால முதலீட்டாளர்களிடமிருந்து விருப்பத்தின் வெளிப்படுத்தலை கோரும் வகையில் 05 பத்திரிகைகளில் 2024 மே 19 மற்றும் 20 ஆம் திகதியில் விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டது. முன்மொழிவின் வேண்டுதலின் (RFP) முடிவில் வருங்கால முதலீட்டாளர் ஒருவர் மாத்திரமே விலை மனுவொன்றை சமர்ப்பித்திருந்தார். எனினும், தகவல்களின் குறைபாடு மற்றும் RFP குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யாமை காரணமாக பரிமாற்ற ஆலோசகர் கூறப்பட்ட RFP இனை நிராகரிப்பதற்கு பரிந்துரைத்துள்ளார்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 91.8 மில்லியன் தொகை இலாபமாக காணப்படுவதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 48.6 மில்லியன் தொகையாக காணப்பட்டது. எனவே நிதி விளைவானது ரூபா 43.2 மில்லியன் தொகையினால் முன்னேற்றமடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது 84.18 சதவீதத்தினால் விற்பனையும் 145.63 சதவீதத்தினால் ஏனைய வருமானமும் 161.34 சதவீதத்தினால் தேறிய நிதி வருமானமும் அதிகரித்தமை முன்னேற்றங்களுக்கான காரணங்களாகும். விநியோக செலவினங்கள் மற்றும் நிர்வாக செலவினங்கள் முறையே 341.24 சதவீதம் 47.46 சதவீதம் என்பவற்றினால் அதிகரித்த போதிலும் வருமானங்களின் அதிகரிப்பானது செலவினங்களின் அதிகரிப்பை விட உயர்வாக இருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவின் முன்னேற்றத்தில் தாக்கம் செலுத்துகின்றது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவடைதல் சதவீதத்துடன் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | வேறுபாட்டுத் தொகை அதிகரிப்பு / வீழ்ச்சி (ரூபா 000’) | வேறுபாடு (%) | வேறுபாட்டிற்கான காரணம் |
|---|---|---|---|
| வருமானம் | 115,778 | 84.18 | மீளாய்வாண்டின் போது பொது அனுமதிச்சீட்டு வருமானம் மற்றும் தம்படிவ சுற்றுலா வருமானம் முறையே ரூபா 70.4 மில்லியன் மற்றும் ரூபா 44.9 மில்லியன் என்பவற்றினால் அதிகரித்தமை. |
| ஏனைய வருமானம் | 26,470 | 145.63 | விசா சேவைகள், பிரயாண காப்புறுதி விற்பனைகள் மற்றும் விமான சேவை ஊக்குவிப்பு என்பவற்றில் அதிகரிப்பே வேறுபாட்டிற்கான பிரதான காரணமாகும். |
| தேறிய நிதி வருமானம் | 22,393 | 161.34 | வங்கி வைப்புக்களின் மீது வட்டி மற்றும் நாணயமாற்று இலாபம் என்பவற்றில் அதிகரிப்பு மற்றும் மேலதிக பற்று வட்டியில் குறைவு ஆகியவையே இதன் பிரதான காரணமாகும். |

| | | | |
|---|---|---|---|
| விநியோக செலவினங்கள் | 6,876 | 341.24 | விற்பனைகள் மேம்படுத்தல் செலவினம் ரூபா 2.7 மில்லியனால் அதிகரித்தமை. அதே போன்று முன்னைய ஆண்டின் போது பூச்சியமாக இருந்த விற்பனைகள் தரகு ரூபா 5.5 மில்லியனால் அதிகரித்தமை. |
| நிர்வாக செலவினங்கள் | 39,618 | 47.46 | மீளாய்வாண்டின் போது கடன் அட்டைகளுக்கான தரகுகள், மோட்டார் வாகன மேம்படுத்தல், ஊழியர் நலன்புரி, போக்குவரத்து, கொடுப்பனவுகள், மிகை ஊதியம் மற்றும் கிறிஸ்மஸ் பரிசுகள் என்பவற்றிற்கான செலவுகள் பாரியளவில் அதிகரித்தமை (மிகை ஊதியம், கொடுப்பனவுகள் மற்றும் கிறிஸ்மஸ் பரிசுகள் என்பவற்றிற்கான செலவுகள் முன்னைய ஆண்டின் போது பூச்சியமாக காணப்பட்டது) |

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற நிதிக்கூற்றுக்கள் மற்றும் தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 வருட காலப்பகுதிகளுக்கான கம்பனியின் குறித்த சில முக்கிய விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **விகிதம்** | **ஆண்டு** | | | | |
|---|---|---|---|---|---|
| | **2023** | **2022** | **2021** | **2020** | **2019** |
| **திரவத்தன்மை விகிதங்கள்** | | | | | |
| நடைமுறை விகிதம் | 3.0 | 3.0 | 2.5 | 4.5 | 3.5 |
| மொத்தச் சொத்துக்களுக்கான தேறிய நடைமுறைச் சொத்துக்கள் | 0.66 | 0.62 | 0.54 | 0.61 | 0.6 |
| **செயற்பாட்டு விகிதங்கள்** | | | | | |
| கடன்பட்டோர் புரள்வு விகிதம் | 22 | 19 | 7 | 4 | 13 |
| கடன்பட்டோர் புரள்வுக் காலம் (நாட்கள்) | 16 | 19 | 52 | 84 | 28 |
| **இலாபத்தன்மை விகிதங்கள்** | | | | | |
| தேறிய இலாப விகிதம் (சதவீதம்) | 2.56 | 1.85 | (5.96) | (18.8) | 1.57 |
| **செயல்திறன் விகிதங்கள்** | | | | | |
| உரிமை மீதான திரும்பல் (ஆர்ஓஈ) (சதவீதம்) | 42.89 | 25.53 | (24.90) | (31.13) | 11.48 |
| மொத்த சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) (சதவீதம்) | 27.94 | 15.18 | (13.68) | (19.99) | 7.37 |

(i) மீளாய்வாண்டின் போது திரவத்தன்மை விகிதங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு எதுவும் அவதானிக்கப்படவில்லை.

(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போதான கடன்பட்டோர் புரள்வு விகிதம் மற்றும் கடன்பட்டோர் புரள்வுக் காலம் என்பன முன்னேறியுள்ளன.

(iii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இலாபத்தன்மை விகிதம் சிறிதளவு அதிகரித்துள்ளது.

(iv) நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் தொற்றுநோய் சூழ்நிலைகள் முடிவடைந்ததன் பின்னர் சுற்றுலாத் துறை படிப்படியாக முன்னேற்றமடைந்து வருவதனால் கடந்த நான்கு வருடங்களை விட உரிமை மீதான திரும்பல் (ஆர்ஓஈ) மற்றும் மொத்த சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) விகிதங்கள் மிகவும் நேர் பெறுமதியினை காட்டுகின்றன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகை முகாமைத்துவம்

| | முகாமைத்துவ கருத்துரை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | பெறுகை நடவடிக்கைகளின் விளைதிறனானதொரு தொழிற்பாட்டிற்காக நிறுவனம் குறைந்தபட்சம் மூன்று வருட காலப்பகுதிக்காக எதிர்பார்க்கப்படும் பெறுகை நடவடிக்கைகளுக்கான பெறுகை திட்டமொன்றினை தயாரித்துக்கொள்ளல் வேண்டும். இது உரிய நேரத்தில் பெறுகை நடைமுறையை பூர்த்தி செய்வதனையும், உருப்படிகளினை கொள்வனவு செய்வதற்காக சிறந்த சந்தைப் பெறுமதியினை பெற்றுக்கொள்வதனையும் நிச்சயிக்கும். எனினும் கம்பனியினால் 2023 ஆம் ஆண்டிற்கான அவ்வாறான திட்மொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நாங்கள் சாதாரனமாக எழுதுகருவி உருப்படிகள் மற்றும் விற்பனை மேம்படுத்தல் உறுப்படிகள் என்பவற்றினை கொள்வனவு செய்கின்றோம். சிறிய நிறுவனமாக இருப்பதனால் சில பெறுகைகள் மாத்திரமே இடம்பெற்றது. ஏதாவது தேவை ஏற்பட்டால் மாத்திரமே நாங்கள் அவைகளை கம்பனி பெறுகை கையேட்டின் பிரகாரம் கொள்வனவு செய்கின்றோம். | பெறுகை செயன்முறையினை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு பெறுகை நடைமுறை வழிகாட்டியின் பிரகாரம் பெறுகை நடைமுறை திட்டமொன்றினை தயாரிக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது. |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | குத்தகைக் காலம் ஆரம்பிப்பதற்கு முதல் குத்தகை உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட வேண்டும். எனினும் 2023 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட தலைமை அலுவலகம் மற்றும் வெள்ளவத்தை வளாகங்கள் என்வபற்றுடன் தொடர்புடைய குத்தகை உடன்படிக்கைகள் குறிப்பிடப்பட்ட குத்தகைக் காலம் ஆரம்பிக்க வேண்டியதிலிருந்து 06 மாதங்கள் முடிவடைந்த பின்னரே கையொப்பமிடப்பட்டிருந்தன. குத்தகை உடன்படிக்கைகளினை இறுதி செய்வதில் உள்ள இந்த தாமதமானது உடன்பட்ட விதிமுறைகளுக்கு இணங்க குத்தகை உடன்படிக்கை அட்டவணைகளினை தயாரிப்பதில் சிக்கலினையும் குத்தகை ஏற்ற கொடுப்பனவுகளில் உள்ள தாமதங்களின் விளைவுகளினையும் ஏற்படுத்த வழிவகுக்கலாம். | பொதுவாக எங்களால் பயன்படுத்தப்படுகின்ற அலுவலக பகுதிகளுக்கான குத்தகை உடன்படிக்கைகளில் உள்ள தாமதங்கள் தொடர்பாக இலங்கை வங்கி சொத்துக்கள் மற்றும் பெறுகை திணைக்களத்திற்கு ஞாபகமூட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. வரைவு ஒப்பந்தம் எங்களுக்கு அனுப்பப்படுவதற்கு முன் செய்யப்பட்ட மதிப்பீட்டினை பெறும் செயற்பாடு மற்றும் முனைவு கடிதங்களுடன் சேர்த்து எங்களுக்கு மீண்டும் பெறுதல் போன்றவை நேரம் எடுக்கும். மேலும், அவர்களின் செயற்பாடு முடிவடைந்த பின் முனைவுக் கடிதம் எங்களுக்கு அனுப்பப்படுவதோடு நாங்கள் இதனை கம்பனியின் இயக்குனர் சபையின் அங்கீகாரத்தினை பெறுவதற்காக அடுத்து இடம்பெற | சட்ட மற்றும் ஒழுங்குவிதி தேவைப்பாடுகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக உரிய நேரத்தில் குத்தகை உடன்படிக்கைகளினை கைச்சாத்திடுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது |

இருக்கும் இயக்குனர் கூட்டத்தில் நிரல்படுத்துவோம். மேற்குறிப்பிட்ட இரு செயன்முறைகளும் நேரத்தை எடுக்கும். குறிப்பாக இது இலங்கை வங்கி கட்டிடத்தில் எங்களால் பயன்படுத்தப்படுகின்ற வளாகத்தினை புதுப்பிக்கும் போது வரும். குத்தகை ஒப்பந்தங்களினை இறுதி செய்வதில் உள்ள தாமதங்களினை குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ii) இரண்டு குத்தகை உடன்படிக்கைகள் காலாவதியாகியிருப்பதுடன் கணக்காய்வு திகதியான 2024 யூலை 08 திகதி வரை எவ்விதமான புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கைகளும் காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அக்காலாவதியான குத்தகை உடன்படிக்கைகளின் விபரங்கள் பின்வருமாறு வழங்கப்படுகிறது.

| | உடன்படிக்கையுடன் தொடர்புடைய கட்டிடங்கள் | உடன்படிக்கை இல. | உடன்படிக்கை காலாவதியான திகதி |
|---|---|---|---|
| (i) | யாழ்ப்பாணம் | 2388 | 2023.12.31 |
| (ii) | கண்டி | - | 2023.09.30 |

யாழ்ப்பாண குத்தகை உடன்படிக்கை தொடர்பாக குத்தகை உடன்படிக்கை காலவதி தொடர்பாகவும் அதே நேரத்தில் புதுப்பித்தலை தொடர்வதற்கான கோரிக்கையையும் குறிப்பிட்டு இலங்கை வங்கி சொத்துக்கள் மற்றும் பெறுகை திணைக்களத்திற்கு அனுப்பிய எமது மின்னஞ்சல் தொடர்பாடல்கள் எங்களிடம் உள்ளன. எங்களின் முன்னைய தெளிவுபடுத்தலில் குறிப்பிட்டதற்கு அமைவாக சொத்துக்கள் மற்றும் பெறுகை திணைக்களத்தின் புதுப்பித்தல் செயன்முறை தாமதங்கள் போன்றவைகளை ஏற்படுத்துகிறது. (ஞாபகமூட்டல் மின்னஞ்சல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது, இல 03)

**கண்டி**

2023 செப்தெம்பர் இருந்தான கண்டி குத்தகை உடன்படிக்கைகள் தொடர்பாக நாங்கள் சொத்துக்கள் நிதி மற்றும் முதலீட்டு கண்டி (பிறைவட்) லிமிட்டட்டுடன் எங்களுக்கு தேவையான மேலதிக அலுவலக இடம் தொடர்பாக பேச்சுவார்த்தை மேற்கொண்டு வருகின்றோம். சொத்துக்கள் நிதி மற்றும் முதலீட்டு கண்டி (பிறைவட்) லிமிட்டட் நிறுவனமானது கண்டி சிடி சென்டரில் உள்ள 06வது மாடி தொடர்பாக பல வகையான முனைவுக் கடிதங்களை அனுப்புகின்றது. இது வியாபாரக்குறியின் தெளிவு எதிர்மறையாக இருப்பதனால் எங்களுக்கு விருப்பமில்லை. பிரயாண மற்றும் சுற்றுலா கம்பனிக்கு சிறந்த வியாபாரக்குறியின் தெளிவு அவசியமாகும். இந்த முனைவுக் கடிதங்கள் இயக்குனர் சபைக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

குத்தகை காலம் ஆரம்பிப்பதற்கு முன்பாக குத்தகை உடன்படிக்கையினை அல்லது புதுப்பித்தலினை கைச்சாத்திடுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

இறுதியாக இடம்பெற்ற சபைக் கூட்டத்தில் இலங்கை வங்கியிலிருந்து கம்பனியினை பிரித்தெடுக்கும் செயன்முறை காரணமாக தற்போதிருக்கும் அலுவலக இடத்தினை விரிவுபடுத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்விரண்டும் சொத்துக்கள் நிதி மற்றும் முதலீட்டு கண்டி (பிறைவட்) லிமிட்டட்டுடன் தொடர்பாடப்படுகின்றன.

கண்டியில் எங்களால் பயன்படுத்தப்படுகின்ற அலுவலக இடங்களின் புதிய உடன்படிக்கையினை கையொப்பமிடுவதில் உள்ள தாமதமே மேலே குறிப்பிட்டதற்கான காரணங்களாகும்.

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கம்பனியிடம் மனித வள தொழிற்பாடுகளினை சீராக செயற்படுத்துவதற்கு தேவையான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் (எஸ்ஓஆர்), மீளாய்வாண்டிற்கான சம்பளக் கொள்கையொன்று காணப்படவில்லை. | கம்பனி இயக்குனர் சபைக்கு வருடாந்தம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட தந்திரோபாய திட்டத்தில் கம்பனியினது ஆட்சேர்ப்பு செயன்முறை காணப்படுகின்றது. அத்துடன் ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்தில் தற்போதைய ஊழியர் பதவியணி மற்றும் எதிர்கால வணிக விரிவுபடுத்தலுக்கு தேவையான பதவியணி என்பவற்றை சபைக்கு சமர்ப்பிக்கும். சகல ஊரியர்களின் சம்பளம் மற்றும் செலுத்தப்பட்ட படிகள் துறைகளில் காணப்படும் நியமங்களினை அடைந்து கொள்வதற்கான அங்கீகாரத்தினை அல்லது பரிந்துரைகளினை அடிப்படையாகக் கொண்டு வருடாந்தம் திருத்தப்படுவதுடன், இவைகள் அங்கீகாரத்திற்காக வருடாந்தம் ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் சபையிடம் சமர்ப்பிக்கப்படுகின்றது. திருத்தத்தமொன்றில் கட்டமைப்பு வழிகாட்டல் திட்டம் தேவைப்படும் போது ஊழியர் சம்பளத்திற்கான சம்பள கட்டமைப்பு வழிகாட்டல் திட்டமொன்றும் சபைக்கு சமர்ப்பிக்கப்படும். | மனித வள தொழிற்பாடு சீராக நடைபெறுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களினை பின்பற்றுவதற்காக கம்பனிக்கானதொரு எஸ்ஓஆர் மற்றும் சம்பளக் கொள்கை என்பவற்றை தயாரிப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

சுற்றுலா துறையில் உள்ள பயண முகவர்கள் குறிப்பிட்ட திணைக்களங்களிற்கான பதவிகளுக்கு நிலையான ஊழிய ஒதுக்கீட்டினை பேணுவதில்லை. பெரும்பாலும் கம்பனிகள் அந்தக் கம்பனியினால் கையாளப்படுகின்ற வணிக பருமனை அடிப்படையாகக் கொண்டே ஊழியர்களினை ஆட்சேர்ப்பு செய்கின்றன. தற்போதுள்ள ஊழியர்களைக் கொண்டு நிறுவனத்தினால் முகாமைத்துவம் செய்யக்கூடியவாறு இருக்குமானால் பெரும்பாலான சந்தர்ப்பங்களின் போது ஊழியர் பதவி விலகல் உடனடியாக பிரயாண கம்பனிகளினால் நிரப்பப்படுவதில்லை. வணிக விரிவுபடுத்தலுடன் கூடிய பிரயாண கம்பனிகள் அவ்வணிக விரிவுபுடுத்தலுக்கு தேவையான ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வர். பிரயாண மற்றும் சுற்றுலா துறையில் உள்ள கம்பனிகள் ஒவ்வொரு குறிப்பிட்ட பதவிகளுக்காக நிலையான ஒதுக்கீட்டை கொண்டிருப்பதில்லை.